1978 ஏப்ரல் 7]

ருக்கலாம். நடந்து வருகிறது என்ற ஐயப்பாட்டை ஏற்படுத்தி யிருக்கிறது. இதன் அடிப்படையில் பரவலான தீவிர விசாரணைகள் செய்யப்பட்டு அந்தத் துறை துப்புரவு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. இராஜா முகமது : இப்போது ஆய்வாளர் ஒருவரை அனுப்பி ஒவ்வொரு கடையின் ஆறு மாத இருப்புகளை அவ்வப்போது கணக்கெடுத்து வருகிறார்கள். இருப்பு களைக் கணக்கெடுக்கும் போது தவறு நடந்திருக்கிறதா இல்லையா என்பது தெளிவாக வந்து விடும். அது தொடர்பாகப் பணம் கையாடல் செய்யப்பட்டிருக்குமானால் அதற்கான நடவடிக்கை களையும் தீவிரமாக எடுத்து வருகிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

---

[*] குறிப்பு ; ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

(2) தகவல் கோரல்

(அ) மாயவரம், கும்பகோணம், பாபநாசம், தஞ்சை தாலுக் காக்கள் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்படுவது குறித்து.

திரு. இரெ. இராசமாணிக்கம் : நான் விதி 42ன் கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன். தமிழ்நாட்டின் மிக முக்கிய மான பிரச்சினை குறித்து தீர்மானம் தந்திருக்கிறேன். அதன்மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன பொருளைப் பற்றிக் கொடுத்தீர்கள். அது என்ன ஆயிற்று என்று கேளுங்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம் ; 1977-78 ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டம் முழுவதும் புயலாலும் வெள்ளத்தாலும் வறட்சியாலும் பாதிக்கப்பட்டிருக்கிறது. மாயவரம், கும்பகோணம், பாபநாசம், தஞ்சை ஆகிய நான்கு தாலுகாக்கள் பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்படாமல் அரசால் வழங்கப் பட்ட சலுகைகள் அனைத்தும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. அதனால் இன்றைய தினம் கூட்டுறவுக் கடன், நிலவரி, அரசாங்கக் கடன் போன்றவைகளை கடுமையான முறையில் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து நீங்கள் எழுதிக் கொடுத்திருப்பதைப் படித்து விட்டு உட்காருங்கள். அதன் மீது விவாதம் இல்லை. கடைசி நாளாக இருப்பதால் கொடுத்ததைப் படித்தால் அரசாங்கம் விளக்கம் கொடுத்தால் கொடுக்கட்டும். இல்லாவிட்டால் அது ரெக்கார்டு ஆகும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் முழுவதும் புயல் வெள்ளத்தால் வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்தும் தஞ்சை, பாபநாசம், கும்பகோணம், மாயவரம் ஆகிய வட்டங்களில் சில பகுதிகள் தவிர மற்ற எல்லாப் பகுதிகளும் பாதிக்கப்பட்ட பகுதிகளாய் அறிவிக்காத காரணத்தால் கூட்டுறவுக் கடன், நில அடமானக் கடன், நிலவரி போன்ற எல்லா வசூல்களும் கடுமையாக வசூல் செய்து வருவதை நிறுத்தி வைத்து விவசாயிகளுக்கு நியாயம் வழங்க வேண்டுமென்பதற்காகவும், பாதிக்கப்பட்ட விவசாயிகளிடம் ஏற்பட்டுள்ள பதட்டநிலையைப் போக்க வேண்டியதன் அவசியம் குறித்து சபையை ஒத்தி வைத்து விவாதிக்க தீர்மானம் கொடுத்திருக்கிறேன். தீர்மானம் மீது விவாதிக்க சபையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-10.)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் எவை என்று பார்த்து அவ்வப்போது அவற்றை அறிவிப்புச் செய்வதற்கு அரசுக்குச் சட்டத்தில் இடம் உண்டு. ஆகையினால் எந்த எந்தப் பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று அவர் தருவாரானால் துறையினர் அவை உண்மையாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவையா என்று பார்த்து விட்டு அந்தத் துறையினர் அரசுக்கு அவைகளை அனுப்பினால் அரசாங்கம் அவைகளை நோடிபை செய்வதற்கு இடம் உண்டு. ஏற்கனவே சில தாலுகாக்கள் கூட அப்படி அறிவிப்புச்செய்யப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன்; மாண்புமிகு உறுப்பினர் ஏற்கனவே அது குறித்து தந்ததாகவும் என்னிடம் பேசும் போது தனியாகச் சொன்னார்கள். நிச்சயமாக அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) காமராஜபுரம் பர்மா அகதிகளின் வீடுகள் நெடுஞ் சாலைத் துறையினரால் இடித்தது குறித்து.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் செங்குன்றம் பகுதியில் நாரவாரி குப்பத்தில் காமராஜபுரத்தில் பர்மாவிலிருந்து வந்த அகதிகள் வாழ்கிறார்கள். அங்கே அவர்களுக்காக வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன.